**சரியான விடை காலாண்டுத் தேர்வு 2017-18**

1.(இ) துறைமுறை அமைப்பு
2.(இ) வரையறையறு முதல்
3.(ஆ) இந்துக்கூட்டுக்குடும்பம்
4.(ஈ) வாரிய அமைப்பு
5.(இ) வரையறாப் பொறுப்பு
6.(இ) சிற்றளவு வியாபாரம்
7.(ஆ) வியாபார இரகசியங்களை காக்க இயலும்
8.(இ) பதிவு செய்ய வேண்டியதில்லை
9.(இ) வரையறையில்லாதது
10(அ) முதல்வர் மற்றும் முகவர்
11.(அ) 1932
12.(ஆ) பிரிவு 44
13.(இ) வரையறுத்த கூட்டாண்மை
14.(அ) ஒப்பந்தத்தால்
15.(இ) நிறுமச்செயல்முறை விதிகளின் மாதிரி
16.(அ) கடனாளர்
17.(இ) வரையறை இல்லை
18.(ஈ) மேற்சொன்ன அனைத்துமாக செயலாற்றுகிறார்
19.(ஆ) ரூ50 00 000 கூடுதலாக இருக்கும் நிறுமம்
20.(அ) மேலாண்மை இயக்குநர்

**கோடிட்ட இடத்தை நிரப்புக**

21. துறைப்படுத்துதல்
22. துறைமுறை அமைப்பு
23. தனியாள் வணிகம்
24. பொதுக் கூட்டுரு
25. உரிமையாளர்
26. வரையறையில்லாதது
27. 20
28. 18
29. இணைவினை
30. உழைக்கும் கூட்டாளி
31. உட்கிடை ஆணையுரிமை
32. பொதுக் கூட்டுரு / சட்டமுறை நிறுமம்
33. செயல்முறை விதிகள்
34. குவிவு முன்னுரிமைப் பங்குகள்
35. தகவலறிக்கை
36. கடனீட்டுப் பத்திரம்
37. 21
38. இயக்குநரவை
39. ஒப்புக்கொண்ட விகிதம்
40. அரசு ஊழியர்

**ஏதேனும் 10வினாக்களுக்கு விடையளி10X4=40**

**41.அமைப்பு** (ஏதேனும் ஒரு இலக்கணம்) ஆலன்லூயி அவர்களின் கூற்றுப்படி செய்ய வேண்டிய பணியினை அறிந்து அதனை தொகுதிகளாக பிரித்தலும் குறிக்கோள்களை அடைய பணியாளர்களால் பயன்தரு முறையே உழைக்கும் நோக்குடன் அவர்களுக்கிடையே உறவு முறைகளை ஏற்படுத்தும் பொறுப்பையும் ஆணையுரிமையையும் வரையுறுத்தி வழங்களையும் அமைப்பு என்ற சொல் குறிக்கும்.

**42.தரவரிசை முறைக்கோட்பாடு:**ஆணையுரிமையின் வரிசை உயர்மட்டத்திலுள்ள உயர் அலுவலரிடமிருந்து கீழ் மட்டத்திலுள்ள தொழிலாளர்வரை படிப்படியாக கீழ்நோக்கி வரவேண்டும். இதற்கு கட்டளை இணைப்பு என்று பெயர்

**43.பன்னாட்டு நிறும எ.கா** 1.யூனி லீவர் லிமிடெட் 2.யூனியன் கார்பைடு 3.இன்டர்நேஷனல் பிசினஸ் மெஷின் 4.பிலிப்ஸ் 5.கோகோ கோலா கழகம்

**44.உழையாக் கூட்டாளி:**இவ்வகை கூட்டாளிகள் தொழிலில் முதலிடுவர். ஆனால் தொழில் நிர்வாகத்தில் பங்கு பெறுவதில்லை. இவ்வகை கூட்டாளிகள் உறங்கும் கூட்டாளிகள் அல்லது உழையாக் கூட்டாளிகள் அல்லது முதலிடும் கூட்டாளிகள் என அழைக்கப்படுவர்.

**45.கூட்டாண்மை:** 1932 ஆண்டு இந்திய கூட்டாண்மைச் சட்டத்தின் 4வது பிரிவின்படி எல்லோரும் சேர்ந்தோ அல்லது எல்லோருக்குமாக ஒருவரோ நடத்தும் தொழிலின் இலாபத்தைப் பகிர்ந்துகொள்ள ஒப்புக் கொண்டவர்களிடையே நிலவும் உறவு

| 46. கூட்டாண்மைக் கலைப்பு | கூட்டாண்மை நிறுவனக் கலைப்பு |
|---|---|
| **ஒருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டாளிகள்** கூட்டாண்மையோடு தங்களுக்குள்ள உறவை முறித்துக் கொள்வதாகும். | **அனைத்து கூட்டாளிகளும்** தங்களுக்குள்ள உறவை முறித்து கொள்வதாகும். |
| தொழில் **முடிவுக்குக் கொண்டு வரலாம்** அல்லது **தொடர்ந்து நடத்தலாம்.** | கட்டாயமாக **தொழிலை முடிவுக்கு கொண்டு வந்துவிடும்.** |

**47. தனி வணிகர்:** "தனக்காக தானே வியாபாரத்தை நடத்தும் ஒரு நபர் தனிவணிகர் ஆவார்.அவர், வியாபாரத்தில் இடும் முதலுக்கு உரிமையாளர் மட்டுமின்றி அமைப்பாளராகவும், மேலாளராகவும் செயல்பட்டுவியாபாரத்தில் கிடைக்கும் இலாபத்தை எடுத்துக்கொண்டு நட்டத்திற்கும் பொறுப்பாகிறார்". **ஜேம்ஸ் ஸ்டீபன்சன்**

**48.கூட்டுருவாக்கம் பெறாத அமைப்புகளின் வகைகள்:**இந்துக் கூட்டுக்குடும்பம், தனியாள் வணிகம், கூட்டாண்மை

**49. ஒப்புறுதி நிறுமம்:** பொறுப்புறுதி நிறுமத்தில், நிறுமம் கலைப்பிற்குள்ளாகும்பொழுது, அதன் கடன்களைத் தீர்க்கப் போதுமான சொத்துக்கள் இல்லா நிலையில், தானே முன்வந்து தருவதாக உறுதியளித்திருந்த தொகை அளவிற்கு மட்டுமே பங்குநரின் பொறுப்பு வரையறை செய்யப்படுகிறது. அத்தகைய நிறுமத்தில் பங்கு முதல் இருக்கலாம். அல்லது பங்கு முதல் இன்றியும் இயங்கலாம். பங்கு முதலைப் பெற்றிருக்கும் பொறுப்புறுதி நிறுமத்தில், உறுப்பினரின் பொறுப்பு, அ)தான் வைத்திருக்கும் பங்குகள் மீது செலுத்தப் பெறாதிருக்கும் தொகையும், ஆ) தான் தருவதாக ஒப்புறுதி அளித்த தொகையுமாகும்.

**50. பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தல்** அழைப்புப் பணத்தைச் செலுத்தாத காரணத்தால், ஒரு உறுப்பினரின் பங்குகளை நிறுமம் பறிமுதல் செய்தல் பங்கு ஒறுப்பிழப்பு எனப்படும். பங்குகளைப் பறிமுதல் செய்தவுடன், அவற்றை வைத்துள்ளவர் நிறுமத்தின் உறுப்பினர் எனும் தகுதியை இழந்து விடுகிறார்.

**51. குவிவு முன்னுரிமைப் பங்குகள்** போதிய ஆதாயம் ஈட்டாவிடில், பங்காதாயம் வழங்கப்படாது. எனினும் அந்தாண்டில் பங்காதாயம் பெறும் உரிமை இவ்வகைப் பங்குநர்கட்குக் காலாவதி ஆவதில்லை. அவர்கட்குச் செலுத்தப்பெறாத பங்காதாயம் சேர்ந்து நிலுவையில் இருந்துகொண்டேயிருக்கும். இலாபம் ஈட்டும் பின்வரும் ஆண்டுகளில், பிற பங்குநர்கட்குப் பங்காதாயம் வழங்குமுன்னர், குவிப் பங்குநர்கட்கு நிலுவையில் உள்ள முந்தைய ஆண்டுகளின் பங்காதாயத்தை வழங்க வேண்டும். வழங்கப்படாப் பங்காதாயத்தை நிலுவையாகப் பெறும் உரிமை படைத்த பங்குதான் குவி முன்னுரிமைப் பங்கு என்று கூறப்படுகிறது.

**52. அரசு நிறுமம்:** ஒரு நிறுமத்தின் செலுத்தப்பட்ட **பங்கு முதலில் 51% மேல்** மைய அரசோ அல்லது மாநில அரசோ வைத்திருப்பது.அரசு நிறுமம் ஆகும். எ.கா பெல், செய்ல், மாருதி உத்யோக் போன்றவை

**53. மாற்று இயக்குநர் :** செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கியிருக்குமாயின் இயக்குநர் ஒருவர் தொடர்ந்து மூன்று மாதங்கள் வெளி மாநிலத்திற்கு சென்றிருந்தால் அவருக்கு பதிலாக இயக்குநரவை மாற்று இயக்குநர் ஒருவரை நியமிக்கும் அந்த நபரே மாற்று இயக்குநர் ஆவார்.

**54.மேலாண்மை ஊதியம்:** மாதம்தோறும் செலுத்தத்தக்கதாகவோ, நிகரஇ லாபத்தில் குறிப்பிட்ட விழுக்காடு என்றோ, கழிவு அடிப்படையிலோ-எப்படியும் இருக்கலாம். மேலாண்மையர்க்கு, நிறுமம் செய்து கொடுக்கும் வசதிகளின் மதிப்பும் இதிலடங்கும். குறிப்பிட்ட எந்த ஆண்டிலும் ஒரு பொது வரையறு நிறுமம் கொடுக்கக் கூடிய ஒட்டுமொத்த மேலாண்மை ஊதியம் அதன் நிகர இலாபத்தில் 11 விழுக்காட்டிற்கு மிகக் கூடாது. ஒரு

மேலாண்மை இயக்குநரின் ஊதியம் நிகர இலாபத்தில் 5 விழுக்காட்டிற்கு மிகுதியாக இருக்கக் கூடாது.

**55. தனி வரையறை நிறுமம்:** ஒரு தனிவரையறு நிறுமத்தில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூபாய் 1 லட்சத்திற்கு குறைவில்லாமலும் அதற்கு மேற்பட்டோ இருக்க வேண்டும். செயல்முறை விதிகளில் கீழ்கண்ட நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்க வேண்டும் 1. தனி வரையறை நிறுமத்திற்குப் பங்குகள் இருப்பின் அவற்றை மாற்றிக் கொடுக்கும் உரிமையில்லை 2. இதை துவங்க குறைந்தது 2நபர் வேண்டும். அதிகபட்ச உறுப்பினர் 50க்கு மிகாமல் இருக்க வேண்டும். 3. பொது மக்களிடம் பங்குகளை வாங்கச்சொல்லி தகவலறிக்கை வெளியிடுவது தடை செய்யப்பட்டுள்ளது.4. பங்கு மாற்றத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. நிறுமத்தின் பெயர் தனி வரையறு நிறுமம் என முடிய வேண்டும்.

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி : 5X8=40**

**56. ஏதேனும் இரு தனிநபர் வணிகம்**

1.**தனிவணிகநிறுவனங்கள் தனிநபரால் உருவாக்கப்பட்டு மேலாண்மைசெய்யும் வணிக அமைப்பு தாமேமுதலீட்டு மேலாண்மை செய்து கட்டுப்படுத்தப்படும் வியாபாரஅமைப்பு தனிவணிகரேஅனைத்துபணிகளையும்செய்கிறா்.**

**தொழிலில் ஏற்படும்இலாபம் முழுவதும் அவரையே சேரும். அதுபோல் நட்டம்முழுவதும் அவரே ஏற்கவேண்டும் தொடங்குவது எளிது. சட்டச்சடங்குகள்ஏதும்இல்லை.**

**இந்துகூட்டுக்குடும்பம்:** இந்து கூட்டுக்குடும்ப வணிக அமைப்பில் இந்தியா தலைசிறந்து விளங்குகிறது. இதில் தந்தை, தாய், மகன், மகள், மகனின் மகன், மகனின் மகள் ஆகியோர் அடங்குவர். அவர்களது சொத்துக்கள் அனைத்தும் கூட்டு சொத்தாகும். இக்குடும்ப வணிகம் குடும்ப தலைவர் மூலம் நடைபெறுகிறது. இவர் கர்த்தா என அழைக்கப்படுகிறார். இந்து கூட்டுக் குடும்பத்தில் பெண்களுக்கு சேர்ந்து வாழவும், திருமணம் செய்து கொள்ளவும் சட்டம் உரிமை வழங்கியிருக்கிறது.. இந்து கூட்டுக்குடும்பங்கள் பெரும்பாலும் விவசாயம், கைத்தொழில்கள், சிறுதொழில்கள் போன்ற தொழில்களைச் சார்ந்திருக்கும். இந்து கூட்டுக் குடும்பத்தைப் பற்றி சட்டம் எந்த வரைவிலக்கணமும் தரவில்லை. ஒரு வழக்கில் சொல்லப்பட்ட தீர்ப்பின்படி இந்து கூட்டு குடும்பம் என்பது, ஒரே இடத்தில் வசித்து, வழிபாடு நடத்தி, ஒரே வகையான உணவு வகைகளை உண்டு, ஒரு குடும்பத்தில் உள்ள சொத்தில் பங்கேற்பவர் என நீதிபதி கூறியுள்ளார்அஸ்ஸாம், மேற்கு வங்காளத்தில் தாயபாகா சட்டமும், இதர பகுதிகளில் மிட்டக்சரா சட்டமும் இந்து கூட்டுக்குடும்பம் பின்பற்றுகிறது

**.57. தனிவணிகத்தின் நன்மைகள் : 1.எளிதான அமைப்பு :** தனியாள் வணிகத்தை சட்டச் சிக்கல்கள் ஏதுவுமின்றி துடங்கலாம். ஒப்பந்தம் பதிவு முதலியன தனியாள் வணிகத்திற்கு தேவையில்லை. **2.நேரடி ஊக்குவிப்பு :** 1.வியாபாரத்தில் இலாபம் முழுவதும் தனியாா் வணிகத்தைச் சாரும். எவருடன் ஒப்பிட்டுக் கொள்ளத் தேவையில்லை. **3.நெகிழ்ச்சி தன்மை :** தனியாள் வணிகம் என்பது முழு அளவில் நெகிழ்ச்சி தன்மையுடன் செயல்படக்கூடிய வணிக அமைப்பாகும். தனியாள் வணிகத்தை மாற்ற எவ்வித செலவுகள் இல்லாமலும் எளிதில் மாற்றிக்கொள்ளலாம்.**4.வியாபார ரகசியங்களை காத்தல் :** வியாபார வெற்றிக்கு தொழில் ரகசியங்களை காத்தல் அவசியம். தனியாள் வணிகத்தில் ஒருவர் மட்டும் என்பதால் வியாபார ரகசியங்களை காக்க இயலும். **5.விரைவான முடிவு :** தனியாள் வணிகத்தில் ஒருவர் வேறுஉரிமையாளா் இல்லை எனவே அவர் காலதாமதமின்றி விரைவாக முடிவெடுக்கலாம் **6.அதிக வெகுமதி :** தனியாள் வணிகத்தில் தன் வியாபாரத்தை சரிவர கவனிக்கத்தவரினால் நட்டம் ஏற்படும். கடின உழைப்பு கவனமான அனுகுமுறை பொருளாதார சிக்கனம் ஆகிய நன்மைகளை தனியாள் வணிகருக்கு சாரும். **7.அதிக நிதி தரமதிப்பீடு** தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. சொந்த சொத்துகளில் இருந்து கடனீந்தோருக்கு செலுத்த வேண்டும்.அதனால் பலா் கடன் தரமுன்வருவார்.

**8.சுய வேலைவாய்ப்பு :** குறைந்த மூலதன முடைய பலருக்கும் தொழில் தொடங்க வாய்ப்பளிக்கிறது. அடிமைத்தொழில் செய்ய விரும்பாத நபர்களுக்கு தனியாள் வணிகம் வாய்ப்பளிக்கிறது. **9.ஆளுமை வளர்ச்சி :** தன்னம்பிக்கை தொழில் தொடங்கும் முயர்சி பொறுப்புணர்ச்சி சுதந்திரமாக முடிவெடுத்தல் போன்றவை வளர்கிறது.**10.எளிமையாக கலைப்பு :** கலைப்பது மிகவும் எளிது. விரும்பிய போது எவ்வித சட்ட சிக்கல்களும் இல்லாமல் கலைக்கலாம்.

**58.கூட்டாண்மை நிறுவனத்தை பதிவு செய்யாமையின் குறைபாடுகள்:** 1.நிறுவனத்திற்கு எதிராகவோ ஏனைய கூட்டாளிகளுக்கு எதிராகவோ (தனக்குள்ள ஒப்பந்த உரிமைகளை நிலைநாட்ட) ஒரு கூட்டாளி வழக்கு தொடரமுடியாது. 2. மூன்றாமவர் மீது எந்த உரிமையியல் மன்றத்திலும் பதிவுறா நிறுவனம் தனக்குரிய பாக்கியைப் பெற எவ்வழக்கையும் தொடர முடியாது. 3. நிறுவனத்திற்கெதிராகவோ, கூட்டாளிகளுக்கெதிராகவோ எவரும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியாது. 4. தனது கூட்டாளிகளை எதிர்த்து நிறுவனம் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது. 5. பதிவுறா நிறுவனம் ரூ.100 க்குமேல் எவருடனும் எதிரீடு செய்துகொள்ளமுடியாது. 6. நிறுவனத்தின் வியாபாரக் குறிகள் மற்றும் பதிப்புரிமைகளை வெளியாட்கள் பயன்படுத்தக் கூடாது என தடுக்கும் உரிமையை கூட்டாண்மை இழக்கும்.

**59 பங்குகளை வட்டத்தில் வெளியிட நிபந்தனைகள்:**

1. வட்டத்திற்கு வெளியிடவுள்ள பங்குகள் முன்னரே வெளியிட்ட பங்கு வகையை சார்ந்ததாக இருக்க வேண்டும்.
2. சாதாரண தீர்மானத்தின் மூலம் இதற்கு அதிகாரம் தந்திருக்க வேண்டும்.
3. உயர்ந்தளவு தள்ளுபடி பங்கு ஒன்றின் முக மதிப்பில் 10 விழுக்காடுக்கு இது மிகக் கூடாது.
4. நிறுமம் தொழில் தொடங்கிய நாளிலிருந்து குறைந்தது ஓராண்டாவது சென்றிருக்க வேண்டும்.
5. இதற்கு மைய அரசின் ஒப்புதல் பெற வேண்டும்.
6. மைய அரசு அனுமதித்த 2 மாதங்களுக்குள் வெளியிட வேண்டும்.

**60. செயல்முறை விதிகளில் உள்ள பொருளடக்கங்கள் :**

1.நிறுமச்சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை **A** எந்த அளவிற்கு இந்நிறுமத்திற்கு பொருந்தாது என்பதை நிறுமம் தனக்கென வகுக்கும் செயல்முறை விதிகளில் குறிப்பிட வேண்டும். 2.தொடக்க ஒப்பந்தங்கள் ஏதேனும் இருப்பினும் அவற்றை ஏற்று கொள்ளுதல் அல்லது நிறை வேற்றுதல் குறித்து 3.பங்குமுதல் பங்குகளின் பல்வேறு வகைகள் ஒவ்வொரு வகைக்கும் உள்ள உரிமைகள் 4.பங்குகள் ஒதுக்கீடு பங்குகள் மீது அழைப்பு கோரல் தொடா்பானவை 5.பங்குகள் ஒறுப்பிழப்பு அல்லது பறிமுதல் செய்தல் பறிமுதல் செய்யப்பட்ட பங்குகளை மறுவெளியீடு செய்தல் 6.பங்குச் சான்றிதல்கள் பங்காணைகள் அனுப்புதல் குறித்து 7.பங்குகள் மாற்றுதல் அல்லது வாரிசு முறை மாற்றம் குறித்த வழிமுறைகள் 8.பங்குகளை பங்கிருப்பாக மாற்றுதல் 9.பங்ககளை அல்லது கடன் பத்திர வெளியீட்டில் ஒப்புறுதியாளர்கட்கு கொடுக்க வேண்டிய தரகுத் தொகை 10.பங்கு

முதலை மாற்றி அமைத்தல் 11.இயக்குநர்களை நியமித்தல் அவர்களின் தகுதிகள் ஊதியம் குறித்தவை 12.இயக்குநர்களின் கடன்வாங்கும் அளவு 13.மேலாண்மை இயக்குநர் மேலாளர் செயலர் போன்றோரை நியமித்தல் 14.நிறுமத்தின் பொது இலச்சியினை பயன்படுத்துதல் குறித்த விதிமுறைகள் 15.இயக்குநரவை கூட்டங்கள் 16.பொதுக் கூட்டத்தில் உறுப்பினர்களின் வாக்குரிமைகள் பகராள்கள் வாக்கெடுப்பு போன்ற விதிமுறைகள் 17.பங்குநர்களின் பல்வேறு வகையான கூட்டங்களை கூட்டி நடத்துதல் 18.பங்கதாயம் வழங்குதல் காப்பு ஏற்படுத்துதல் போன்றவை 19.மீள்தகு முன்னுரிமைப் பங்குகள் வெளியீடுகள் குறித்த விதிமுறைகள் 20.நிறுமக் கலைப்பு

**61. ஒரு பொது வரையறு நிறுமத்தில் இயக்குநர்கள் எவ்வாறு நியமிக்கப்படுகின்றனர்?**

இயக்குநர்கள் வழக்கமாக நிறும செயல்முறை விதிகளில் பெயர் குறிப்பிட்டு நியமனம் பெறுவர். இல்லையெனில், அமைப்பு முறை ஏட்டில் கையொப்பமிட்டோர் முதலாம் இயக்குநர்களாகக் கருதப்படுவர். **அ. நிறுமம் நியமிக்கும் இயக்குநர்கள்:** ஒவ்வோராண்டும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்குநர்களால் தேர்ந்தெடுக்கப்படுவதன் மூலம் இயக்குநர்கள் நியமனம் பெறுகின்றனர்.**ஆ. இயக்குநரவை நியமிக்கும் இயக்குநர்கள்** கூடுதல் இயக்குநர்களை இயக்குநரவையே நியமிக்கலாம். தற்காலிகமாக எழும் காலி இடங்களை இயக்குநரவையே நியமித்து நிரப்பலாம். (இறப்பு, பதவி விலகல் போன்ற சூழ்நிலைகளில்) மாற்று இயக்குநர்களையும் இயக்குநர் அவை நியமிக்கலாம். **இ. மூன்றாம் தரப்பினர் நியமிக்கும் இயக்குநர்கள்:** செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கினால் நிறுமத்திற்கு கடன் வழங்கியிருக்கும் வங்கி அல்லது நிதி நிறுவனங்கள் தங்கள் சார்பில் பிரதிநிதிகளை இயக்குநர்களாக நியமிக்கலாம்.

**ஈ. மைய அரசு நியமிக்கும் இயக்குநர்கள்:** நிறுமச் சட்ட அவை அளித்த ஆணையின் அடிப்படையில் மைய அரசு இயக்குநர்களை நியமிக்கலாம்.

**62. .கூட்டாளிகளின் வகைகள்:** 1. **உழைக்கும் கூட்டாளி** : தொழிலில் முதலிடுவர். தொழில் நிர்வாகத்தில்பங்கு பெறுவார். மேலாண்மை கூட்டாளி (அல்லது) பொதுக்கூட்டாளி என அழைக்கப்படுவர். **2. உழையா கூட்டாளி :** தொழிலில் முதலிடுவர். ஆனால் தொழில் நிர்வாகத்தில் பங்கு பெறுவதில்லை. இவர் உறங்கும் கூட்டாளி (அல்லது) முதலிடும் கூட்டாளி என அழைக்கப்படுவர். **3. பெயரளவு கூட்டாளி (பாசாங்கு) :** இவர் தொழிலில் முதலிடுவதில்லை, நிர்வாகத்தில் பங்கேற்பதில்லை. கூட்டாண்மையில் தன் பெயரை பயன்படுத்த அனுமதித்து உதவுகிறார். வியாபாரக் கடன்களுக்கு வெளியாரைப் பொறுத்தவரை இவரும் பொறுப்பாகிறார். **4. இலாபத்தில் மட்டும் பங்கேற்கும் கூட்டாளி :** இக்கூட்டாளி இலாபத்தை மட்டும் பகிர்ந்து கொள்வார். நட்டத்தைப் பகிர்ந்து கொள்ள மாட்டார். இவர் நிர்வாகத்தில் பங்கு பெற முடியாது.

63. **ஒருங்கிணைத்தல்:** விரும்பும் இலக்கினை அடைய நிறுவனத்தின் பல்வேறு நடவடிக்கைகளும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். ஒரு பண்டகசாலை இலாபம் பெறவேண்டிமெனில் கொள்முதல் துறையும், விற்பனைத் துறையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் **கட்டளை ஒருமை** ஒவ்வொரு பணியாளரும் ஆணைகளை உயர் அதிகாரியிடமிருந்து பெற வேண்டும். ஒரு பணியாளர் இரு உயர் அதிகாரிகளின் கீழ் பணியாற்றுவது கடினம். இரண்டு உயரதிகாரிகளின் கீழ் பணியாற்றினால் குழப்பமும் ஒழுங்கின்மையும் ஏற்பட வாய்ப்புண்டு.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 4X20=80**

**64.அ) பல்வகை தொழில் அமைப்புகள்**

**1) தனிவணிகம்:** இது பழமையான அமைப்பு. தனிநபர் முதலிட்டு, தன் பட்டறிவு மற்றும் தொழில் திறனை பயன்படுத்தி மேற்கொள்ளும் தொழில். வரும் இலாப நட்டம் முழுதும் அவரையே சாரும். இவரது பொறுப்பு வரையறா பொறுப்பாகும். தொடங்க, முடிவதற்கு சட்டச் சடங்கு ஏதுமில்லை. எல்லாம் அவரே; அவரே எல்லாமும் என்ற கோட்பாட்டின் படி நடைபெறும் அமைப்பாகும்.

**2) இந்து கூட்டு குடும்பம்:** இந்து கூட்டுக்குடும்ப வணிக அமைப்பில் இந்தியா தலைசிறந்து விளங்குகிறது. இதில் தந்தை, தாய், மகன், மகள், மகனின் மகன், மகனின் மகள் ஆகியோர் அடங்குவர். அவர்களது சொத்துக்கள் அனைத்தும் கூட்டு சொத்தாகும். இக்குடும்ப வணிகம் குடும்ப தலைவர் மூலம் நடைபெறுகிறது. இவர் கர்த்தா என அழைக்கப்படுகிறார். **3) கூட்டாண்மை:** எல்லோருமோ, எல்லோர் பொருட்டு அவர்களுள் எவருமோ நடத்திவரும் தொழிலின், ஆதாயத்தை பகிர்ந்து கொள்ள உடன்பட்ட நபர்களிடையே நிலவும் உறவு கூட்டாண்மை. உறுப்பினர்கள் குறைந்தது 2 பேர், அதிக அளவு வங்கி தொழிலாயின் 10, பிற தொழிலாயின் 20 பேர் கொண்ட அமைப்பு. உறுப்பினர்கள் கூட்டாளி என அழைக்கப்படுவர். இலாபநட்டங்களை ஒப்புக் கொண்ட விகிதத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும். **4)கூட்டு பங்கு நிறுமம்:** நிறுமம் என்பதொரு புனைவு நபர். நிலைபேற்று தொடர்ச்சியுடனும் பொதுமுத்திரையுடனும் சட்டத்தால் உருவாக்கப்பட்டது. நிறும முதல் சம அலகுகளாக பிரிக்கப்பட்டிருக்கும். இது ஒவ்வொன்றும் 'பங்கு' என அழைக்கப்படும். இப்பங்குகளை வைத்திருப்பவர் பங்குநர். . இந்திய நிறும சட்டம் 1956-கீழ் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டும். நிறும மேலாண்மை' பங்குநர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்கள் அடங்கிய இயக்குநரவையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**5) கூட்டுறவு அமைப்பு:** கூட்டுறவு என்பது நபர்கள் தாமாகவே அமைத்துக் கொள்ளும் சங்கமாகும். பொதுவாக, உள்ளூரில் ஒரே இடத்தில் வசிப்பவர்கள் பொருளாதார நலன் கருதி ஒன்று சேரும் தன் விருப்ப மன்றமாகும். இதில் எவரும் பேதமின்றி உறுப்பினராகலாம். கூட்டுறவு அமைக்க 25 நபர் தேவை. சேரவும், விலகவும் வற்புறுத்தல் இல்லை. குடியாட்சி முறையில் ஒரு நபர் - ஒரு வாக்கு கொண்ட அமைப்பு. சேவையே இதன் முதன்மை நோக்கம்.

**6) பன்னாட்டு நிறுமங்கள்:** இவை பல நாடுகளில் இயங்கி வருபவை. இத்தகைய நிறுமங்களின் தொழிற்சாலைகளும், அலுவலக கிளைகளும் ஒரு நாட்டிற்குமேல் இருக்கும்.

(எ.கா) 1) யூனிலீவர் லிமிடெட்: இது ஒரு பிரிட்டிஷ் நிறுமம். இதன் இந்திய துணை நிறுமம் இந்துஸ்தான் லீவர் லிமிடெட் ஆகும் . 2) IBM: இது அமெரிக்க நிறுவனம். கம்யூட்டர் துறையில் பல நாடுகளில் கொடிகட்டி பறக்கிறது. 3) கோகோ-கோலா: அமெரிக்க குளிர்பான நிறுவனம் **அரசு நிறுவனங்கள்:(1) துறைமுறை அமைப்பு:** இது அரசின் ஒரு பகுதி. தனி அமைச்சகத்தால் நிர்வாகம் செய்யப்படுகிறது. பொதுத்துறை அமைப்பில் மிகவும் பழமையானதாகும். இது மத்திய அரசாலோ, மாநில அரசாலோ நடத்தப்படுவதாகும்.

(எ.கா) ரயில்வே, தொலைபேசி, தொலைக்காட்சி **(2) பொதுக் கூட்டுரு:** இது பாராளுமன்ற தனி சட்டம் மூலம் உருவாக்கப்படுவது. இது ஒரு சட்டமுறை கழகமாகும். இச்சட்டமே இதன் நோக்கம், அதிகாரங்கள், பணிகள் ஆகியவற்றை வரையறுக்கிறது. இது அரசின் நிதியுதவி பெறும் சுயாட்சி அமைப்பு இதன் முழு பங்கு முதலும் அரசாங்கத்தால் செலுத்தப்படுகிறது. இதன் நோக்கம் பொது மக்களுக்கு சேவை புரிவதாகும். (எ.கா) இந்திய ரிசர்வ் வங்கி, LIC, UTI ஆகியவை **(3) அரசு நிறுமம்:** இந்திய நிறுமச்சட்டம் 1956ன்படி செலுத்திய பங்கு முதலில் 51% பங்குகளை மத்திய அரசோ, மாநில அரசோ அல்லது இரண்டுமோ சேர்ந்து முதலீடு செய்திருந்தால் அது அரசு நிறுமம் ஆகும். அரசு நிறுமங்கள் கலப்பு உரிமை நிறுமங்கள் எனவும் அழைக்கப்படுகிறது.. இதன் பணியாளர்கள் அரசு ஊழியர்கள் அல்லர் (எ.கா.) BHEL, Maruthi உத்யோக் நிறுவனம் **(4) வாரிய அமைப்பு:** இந்த

அமைப்பின் மேலாண்மை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவிடம் உள்ளது. இது தனிச்சட்டங்களால் ஒழுங்குபடுத்தப்படுகிறது. (எ.கா.) தமிழ்நாடு மின்சார வாரியம்,

**64. ஆ)தனிவரையறுநிறுமம் பொதுவரையறு நிறுமம் வேறுபாடு**

| வ.எண் | அடிப்படை | தனி நிறுமம் | பொது நிறுமம் |
|---|---|---|---|
| 1 | உறுப்பினர் எண்ணிக்கை | குறைந்தது 2 அதிகபட்சம் 50 | குறைந்தது 7 உச்ச அளவிற்கு வரையறை இல்லை |
| 2. | பெயர் | இறுதியில் தனிவரையறுக்கப்பட்டது.என்று முடிவடைய வேண்டும். | வரையறுக்கப்பட்டது என்ற சொல்லுடன் முடிவடைய வேண்டும். |
| 3. | செயல்முறை விதிகள் | தான் சொந்தமாக தயாத்த செயல் நடைமுறை விதிகளை நிறுமப்பதிவாளரிடம் சமர்பிக்க வேண்டும். | சேயல் நடைமுறை விதிகளை தாயாரிக்காத நிறுஹீறுமங்கள் நிறுமச்சட்டத்தில் உள்ள மாதிரி அட்டவணை – அபின்பற்ற வேண்டும். |
| 4. | குறுமப்பங்கெகாப்பம் | அவசியமில்லை | கட்டாயமாக்கப்பட்டுள்ளது |
| 5 | இயக்குநர்கள் | குறைந்தது 2 இயக்குநர்கள் தேவை | குறைந்தது 3 இயக்குநர்கள் தேவை |
| 6. | சட்ட முறை கூட்டம் | அவசியமில்லை | 6 மாதத்திற்குள் கூட்ட வேண்டும். |
| 7. | தகுதிப்பங்குகள் | இயக்குநர்கள் தேர்தெடக்கப்பட தகுதிதிப்பங்குகள் பெறவேண்டிய அவசியமில்லை | இயக்குநர்கள் தகுதிப்பங்குகளை பெற்றிட வேண்டும். |
| 8. | குறைவெண் | கூட்டம் செல்லத்தக்கதாக அமைய கூட்டத்திற்கு வருகை தர வேண்டி குறைந்தளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை 2 | குறைந்தளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை 5 |
| 9. | பங்கு விற்பனை | பொது மக்களுக்கு பங்கு விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது | பங்கு விற்பனை செய்யலாம் |
| 10. | இயக்குநர்களின் ஓய்வு | 65 வயதுக்கு மேலும் இயக்குநராக பணியாற்றலாம் | 65 வயதில் ஓய்வு பெற வேண்டும். |

**65அ)தனி வணிகரின் குணாதிசயம் 1)தனிநபர்உரிமையும்கட்டுபாடும்** தனிநபர் ஒருவரே இதன்உரிமையாளர்.எனவே அவரே உரிமையாளராகவும் தலைவராகவும்யாருடையகுறுக்குஇல்லாமல்சுந்திரமாகவியாபாரத்தைநடத்துகிறார்.அதனால்தனியாள்வணிகத்தின்உரிமையும் கட்டுப்பாடும் அவர் வசமே உள்ளது.**2)மூலதனம்**: தனியாள்வணிகத்தில்அவரேமுதலீடு செய்கிறா;. இம்முதல்தன்சொந்த சேமிப்பிலிருந்தோ அல்லதுநண்பா;கள்உறவினா;கள்மற்றும்நிதிநிறுவனங்களிடமிருந்தோ கடனாபெற்றுமுதலீடுசெய்யலாம். **3)வரையறாபொறுப்பு**: இவரின்பொறுப்பு வரையறுக்கப்படாதது. வியாபாரகடன்களுக்குதொழிலின்சொத்துகள்போதுமானதாக இல்லாவிட்டால்தனதுசொந்தசொத்திலிருந்துஅக்கடன்களை தீர்க்கவேண்டும். **4)இலாபநட்டம்:** வியாபாரத்தில்கிடைக்கும் இலாபம் முழுவதும்தனிவணிகரையேசேரும். அவர் பிறருடன் பங்கிட்டுக்கொள்ளதேவையில்லை.அதுபோலநட்டம்ஏற்பட்டால் அந்தநட்டம்முழுவதையும்அவரேஏற்கவேண்டும்.

**5)சட்டத்தனித்துவமின்மை:** தனியாள்வணிகத்தில் உரிமையாளரையும்தொழிலையும்சட்டம்ஒன்றாகக்கருதுகிறது. உரிமையாளரோஅவரேநிர்வாகம்செய்கிறார்.கூட்டுப்பங்குநிறுமத்தைப்போல்உரிமையும்நிர்வாகமும்பிரிக்கப்படவில்லை.

**6.தனிச்சட்டம்மில்லை:**கூட்டாண்மைசட்டம்கூட்டாண்மைக்கும்இந்தியநிறுமங்கள்சட்டம்நிறுமத்திற்கும்இந்தியகூட்டுறவுச்சட்டம்கூட்டுறவுசங்கங்களுக்கும்இருப்பதைப்போலதனியாள்வணிகத்திற்கு தனிச்சட்டம்ஏதுவும்இல்லை. **7)பதிவு:-** தனியாள் வணிகத்தை பதிவுசெய்யவேண்டியதில்லை சிலவகைத் தொழில்களை மேற்கொள்ள உள்ளாட்சிநகராட்சிமற்றும் மாநகராட்சியிடமிருந்து உரிமம்பெற வேண்டும். **8)வாழ்வு:** நிறுமம் போன்று இதற்குநீடித்தவாழ்வு கிடையாது. தனியாள்வணிகரின்வாழ்வைப்பாதிக்கும் எதுவும் அவருடையதொழிலையும் பாதிக்கும். அவருடையஇறப்பு(அ)தொழில்திறமைஇழத்தல் (அ) அவருக்கு வாரிசுஇல்லாமை போன்றவை தொழிலை முடிவுக்குகொண்டுவரும். **9)எளிமை** இதைதொடங்குவதும்கலைத்தலும்மிகவும் எளிது. இவ்வணிகத்தைகலைக்கசட்டவிதிகளைபினபற்ற தேவையில்லை. **10உள்ளுர்வியாபாரம்:** இவ்வணிகம்ஒருகுறிப்பிட்டப்பகுதியில்மட்டுமேநடைபெறும். சிலவகைத் தனிவணிகங்கள் கிளைகளுடன்சிலஇடங்களில்நடைபெறும்.

**65. ஆ)இயக்குநர்களின் அதிகாரம்: 1.பொது அதிகாரங்கள்**
நிறுமம் எச்செயல்களில் ஈடுபட அதிகாரம் பெற்றுள்ளதோ, அந்த அனைத்துச் செயல்பாடுகளில் ஈடுபடவும், அவற்றிற்கு வேண்டிய அதிகாரங்களைப் பயன்படுத்தவும் ஒரு நிறுமத்தின் இயக்குநரவைக்கு உரிமை உண்டு. ஆயினும் நிறுமம் எச்செயலையாவது பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படிதான் செய்யவேண்டும் என்றிருப்பின், அதனை இயக்குநர் தானே செய்யக்கூடாது. **2. சட்டமுறை அதிகாரங்கள்** இயக்குநர் அவைக் கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றி, கீழ்க் கொடுக்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.1)அழைப்புப் பணம் செலுத்துமாறு கோரிட 2)கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட 3)கடனீட்டுப் பத்திரம் வெளியிடாமல் வேறுவகையில் கடன் பெற 4)நிறுமத்தின் நிதியினை முதலீடு செய்ய 5)கடன் வழங்க **3. இயக்குநரவைக் கூட்டத்தில் பயன்படுத்தக் கூடிய பிற அதிகாரங்கள்** 1) இயக்குநர் பதவியில் காலியிடம் இருப்பின், அதனை நிரப்ப 2)செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கியிருப்பின், கூடுதல் இயக்குநர்களை நியமித்துக் கொள்ள. 3) செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கியிருப்பின், மாற்று இயக்குநர் ஒருவரை நியமிக்க. 4) எந்த ஒரு இயக்குநரோ, அவருடைய உறவினரோ தொடர்புற்றிருக்கும் ஒப்பந்தங்கட்டு அனுமதி வழங்க 5) ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் விளம்புவதற்காக பங்காதாயச் சதவிகிதத்தைக் குறிப்பிட்டுப் பரிந்துரைக்க. 6) அதே மேலாண்மையின் கீழ் இயங்கும் நிறுமங்களில் முதலீடு செய்ய 7) நிறுமத்தின் முதலாவது தணிக்கையரை நியமிக்க 8) பதவி விலகலாலன்றி வேறு காரணத்தால் தணிக்கையர் பதவியில் எழுந்துள்ள காலியிடத்தை நிரப்ப. **4. இயக்குநர் அதிகாரங்களில் கட்டுப்பாடு** இயக்குநர் அவைகட்கு அதிகாரங்கள் நிரம்ப இருப்பினும் கீழ்க்கண்ட அதிகாரங்களைப் பங்குநர் பொதுக் கூட்டத்தின் இசைவு பெற்றாலொழிய பயன்படுத்த முடியாது. அதாவது, தாம் விரும்பியவாறு இயக்குநர்கள் செயல்பட முடியாது, பங்குதாரர்களின் ஒப்புதலுடன்தான் செயல்பட் முடியும். 1)நிறுமத்தின் தொழில் முழுவதையும் அல்லது மிகப் பெரும்பான்மையானதை விற்க, குத்தகைக்கு விட அல்லது வேறுவகையில் பயன்படுத்த. 2)இயக்குநர் ஒருவர் தரவேண்டிய கடனுக்கத் திருப்பிச் செலுத்தும் காலக்கெடுவை நீட்டிக்க. 3)முன்னரே வாங்கப்பட்ட கடன் தொகையுடன் தற்பொழுது வாங்கவுள்ள கடனையும்

சேர்த்தால், அது நிறுமத்தின் செலுத்தப்பெற்ற முதல் தொகையும் காப்புத் தொகையும் சேர்த்த தொகைக்கு அதிகமாயிருப்பின், தற்பொழுது திட்டமிட்டுள்ள கடன் பெற 4)குறிப்பிட்ட வரம்பு கடந்து அறக்கொடை வழங்க

66)அ)

| கூட்டாண்மை | தனியாள்வணிகம் |
|---|---|
| இந்தியக் கூட்டாண்மைச் சட்டம்,1932 நெறிப்படுத்துகிறது | தனிச் சட்டம் ஏதுமில்லை. |
| குறைந்த அளவு இரண்டுபேர். அதிக அளவு வங்கித் தொழில் எனில் 10 பேர்,இதர தொழில் எனில் 20 பேர். | ஒருவர் மட்டுமே |
| இது உடன்பாட்டால் உருவாக்கப்படுகிறது. | உடன்பாடு அவசியம் இல்லை. |
| பதிவு கட்டாயம் இல்லை | பதிவு தேவையில்லை |
| கூட்டாளிகளிடம் உரிமையும் கட்டுப்பாடும் உள்ளது | தனியாள்வசம் உள்ளது. |
| அனைத்து கூட்டாளிகளுக்கும் மேலாண்மையில் பங்கேற்க உரிமை உண்டு. | தனி நபரால் மேலாண்மை செய்யப்படுகிறது |
| இதில் ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் முதலிடுகிறார்கள். | ஒரு நபர் மட்டும் முதலிடுவார். |
| கூட்டுப்பொறுப்பு. | தனி நபர் பொறுப்பு. |
| ஒவ்வொருகூட்டாளியும் கூட்டாண்மையின் முதல்வராகவும் மற்ற கூட்டாளிகளின் முகவராகவும் கருதப்படுகிறார். | தானே முகவராக செயல் படலாம் அல்லது ஒரு முகவரை நியமித்துக் கொள்ளாம். |
| ஒப்புக்கொண்ட விகிதத்தில் இலாபம் அல்லது நட்டத்தை பகிர்ந்து கொள்வார்கள். | இலாபப் பகிர்வு இலாபம் அல்லது நட்டத்தை ஒருவரே ஏற்கவேண்டும். |

**66.ஆ) நிறுமச்செயலரின் பணிகளும் கடமைகளும் :**

1.நிறுமத்தின் செயலகத்துறையின் தலைவர் என்ற முறையில் தனக்குகீழ்லுள்ள அனைத்து நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் நிறுமத்தின் முன்மை அதிகாரி என்ற முறை உண்மைச்சான்றென உறுதியளிக்க வேண்டிய ஆவணங்களில் கையெழுத்திடுதல் அவருடையபணி.

2.இயக்குநரவை தலைவரிடம் கலந்தாலோசித்து இயக்குநரவை கூட்டநாள் இடம் நேரம் முதலியவற்றை முடிவ செய்தலும் அதன் நிகழ்ச்சி நிரலைத்தயாரித்து அதனை கூட்டஅறிவிக்கையுடன் இணைத்தனுப்புதலுமாரும்.

3.இயக்குநரவை கூட்டத்தின் செயல்பாடுகள் நிறுமங்கள் சட்ட விதிமுறைகளுக்கு முரண்படாமலும் அமைப்பு முறையேடு செயல் முறை விதிகள் ஆகியவற்றின் வரம்பு மிகாமலிருக்க பார்த்துகொள்ள வேண்டியது அவர் பணிகள் ஆகும்.

4.பங்குநர்களின் நலன் சிறக்கும் வகையில் செயலர் பணிசெய்கிறார்.அவர்களுடன் கூர்மதிப்புடன் நடந்தகொள்ள வேண்டும்.

5.பங்குநர்கள் எழுப்பும் வினாக்களுக்கும் ஐயங்கட்கும் உாயி முறையில் பண்புகாத்து காலங்கடத்தாமல் பதிலளிக்க வேண்டும்.

சட்ட முறைக்கடைமைகள் :

1.எச் சட்டத்தின் கீழாவது உண்மையென சான்றளிக்க வேண்டியிருப்பின் அத்தகைய ஆவணத்தில் கையொப்பமிடல்

2.தகவலறிக்கைக்கு மாற்றறிக்கை தக்கல் செய்ய

3.நிறுமத்தின் பதிவலுவலகம் உள்ள இடம்குறித்த அறிக்கையைத்தாக்கல் செய்ய

4.தொழில் தொடக்கச் சான்றிதல் பெற சட்டமுறை உறுதிவிலம்பல் செய்தலும் அவற்றை பதிவாளரிடம் தக்கல் செய்தலும்.

5.நிறுமத்தின் ஆண்டறிக்கையில் கையப்பமிடல்

பொதுக் கடமைகள் :

1.தன்னுடைய கமைகளை மிகுந்த கவனத்துடனும் நேர்மையுடனும் தன் அதிகார எல்லையை மீறாது செயல்படலும்.

2.இரகசியமான செய்திகளை வெளியிடாது காத்தல்.

**67.அ) கூட்டாளிகளின் உரிமைகள்** 1. ஒவ்வொரு கூட்டாளிக்கும் தொழிலை நடத்தவும் மேலாண்மையில் பங்கேற்கவும் உரிமை உண்டு. 2. ஒவ்வொரு கூட்டாளிக்கும் நிறுவன தொடர்பான பிரச்சனைகளுக்கு தம் கருத்தை தெரிவிக்க உரிமை உண்டு. 3. முக்கிய முடிவுகளை எடுக்கும் முன்னர் தங்களை கலந்து ஆலோசிக்க வேண்டும் எனக் கோருவதற்கு உரிமை உண்டு 4. ஒவ்வொரு கூட்டாளிக்கும் நிறுவன ஏடுகளையும், கணக்குகளையும் கண்காணித்து நகலெடுக்கும் உரிமை உண்டு.

5. ஒவ்வொரு கூட்டாளிக்கும் இலாபத்தில் சமபங்கேற்க உரிமை உண்டு. 6. தொழிலுக்கு வழங்கிய கடன் மற்றும் முன்பணம் மீது 6% வட்டி பெற உரிமைஉண்டு. 7. அன்றாட வியாபாரத்தில் தாம் செய்த செலவுக்கு ஈட்டுரிமை பெற உரிமை உண்டு 8. தொழிலுக்காக நிறுவன சொத்துக்களை நிறுவனத்தில் சேர்ப்பதை தடுக்க உரிமையுண்டு. 9. ஒப்புதல் இன்றி புதிய கூட்டாளிகளை நிறுவனத்தில் சேர்ப்பதை தடுக்க உரிமையுண்டு. 10. நிறுவனத்திலிருந்து ஓய்வு பெற உரிமை உண்டு.

**கூட்டாளியின் கடமைகள்** அனைத்து கூட்டாண்மைக்கும் பொருந்தும், உடன்பாட்டால் மாற்றமுடியாத சட்டத்தால் நிரந்தரமாக கொடுக்கப்பட்ட கடமைகளே முழுமையான கடமைகள் : 1) ஒவ்வொரு கூட்டாளியும் தன் கடமைகளை கவனக்குறைவின்றியும், நாணயமாகவும், அனைத்து கூட்டாளிகளின் நலனுக்காகவும் நிறைவேற்ற வேண்டும். 2)ஒவ்வொரு கூட்டாளியும் ஏனைய கூட்டாளிகளிடம் விசுவாசமாகவும், உண்மையாகவும் நடந்து கொள்ள வேண்டும். 3) தனக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகார வரம்பிற்குள் செயல்பட வேண்டும். 4) வேறு வகையில் உடன்பாடு இல்லாத போது நிறுவன நட்டத்தை சமமாக பகிர்ந்து கொள்ள கடமைப்பட்டவர். 5) தொழில் நடவடிக்கையில் தான் அறிந்து செய்த தவறினால் ஏற்பட்ட நட்டத்துக்கு நிறுவனத்திற்கு ஈட்டுறுதி செய்ய வேண்டும். 6) பிற கூட்டாளிகளின் இசைவின்றி தன் பங்கை பிறருக்கு மாற்றக் கூடாது. 7) நிறுவன தொழில் சார்ந்த கணக்குகளை உண்மையாகவும், சரியாகவும் வைத்திருக்க வேண்டும். 8) கூட்டாண்மை தொழிலுக்கு எதிராக எத்தொழிலையும் போட்டியாக கூட்டாளி நடத்தக்கூடாது. 9) நிறுவன சொத்துக்களை நிறுவன நலனுக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும். 10) எக்கூட்டாளியும் இரகசிய லாபங்களை ஈட்டக்கூடாது.

67.ஆ) பங்குகட்கும் கடனீட்டுப்பத்திரங்களுக்கும் வேறுபாடு

| அடிப்படை | பங்குகள் | கடனீட்டுப்பத்திரங்கள் |
|---|---|---|
| பொருள் | ஒரு நிறுமத்தில் பங்கு முதலீல் ஒரு | கடனீட்டுப்பத்திரங்கள் நிறுமத்திற்கு கொடுத்த |

| | | |
|---|---|---|
| | சிறு கூரே பங்காகும் எனவே பங்குநர் நிறுமத்தின் உரிமையாளர் நிலையில் இருக்கிறார் | கடனை உறுதிபடுத்தும் சான்றாகும்கடன் பத்திரதாரர் நிறுமத்தின்கடனாளர்ஆகிறார் |
| இலாபத்தை த வழங்குதல் | போதுமான லாபம் ஈட்டினால் மட்டுமே பங்குனர் கட்குபங்காதாம் வழங்கப்படும். | குறிப்பிட்ட கால இடைவெளிகளில் லாப நட்டத்தை கருதாமல் கடனீட்டு பத்திரத்தின் மீது வட்டி வழங்கப்படுகிறது.இயக்குநர் முடிவால்இதனை மாற்ற முடியாது |
| இலாபத்தின் அளவு | முற்றுரிமை பங்கட்கு குறிபிட்ட விதத்தில் நிலையான பங்காதயம் ஆனால் நேர்மை பங்குகட்கு கொடுக்கப்படும் பங்காதாய விகிதம் லாபத்திற்கேற்ப மாறக்கூடியது | குறிப்பிட்ட விதத்தில் வட்டி செலுத்தப் பெறும் இலாத்தின் அளவை ஒட்டி வட்டிவீதம் மாறாது. |
| இயக்குநர் ஒப்புதல் | லாபம் ஈட்டுறுப்பினும் இயக்குநர்அவை பரிந்துரைத்து ஆண்டுபொதுக் கூட்டத்தில் தீர்மானத்தின் மூலம் விளம்பப்பட்டால் மட்டுமே பங்காதாயம் வழங்கப்படும் | கடனீட்டுப்பத்திர வட்டி செலுத்துவதற்கு எவருடைய பரிந்துறையும் ஒப்பதலும் வேண்டியதில்லை |
| லாபத்தை வழங்குதல் | பங்காதாயம் லாபப்பகிர்வு ஆகும் | கடனீட்டுப்பத்திரவட்டி லாபத்தின் மீதான செலவாகும். |
| பொறுப்பு | பங்குநர் ஒருவர் பொறுப்புதான் வைத்துள்ள பங்குகள் மீது செலுத்த பெறதிருக்கும் தொகை அளவே ஆகும். | அத்தகைய பொறுப்பு ஏதும் கடனீட்டு பத்திரதாரர்களுக்கு இல்லை |
| வட்டத்தில் வெளியிடுதல் | நிறுமச்சட்த்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில நிபந்தனைகளுக்கு உட்பட்டுதான் நிறுமம் பங்குகளை வட்டத்தில் வெளியிடலாம் | கடனீட்டபத்திரங்களைவட்டத்தில் வெளியிட அத்தகைய நிபந்தனைகள் ஏதுமில்லை |
| சொத்துகள் மீது பிணை | நிறுமச் சொத்துகள் மீது பங்குநர்கட்கு ஈடுஏதுமில்லை | கடனீட்டு பத்திரங்கள் பொதுவாக சொத்துகள் பிணையாக பெற்றிருக்கும் |